செ.வெ.எண்: 38 நாள்: 13.02.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.02.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

நமது மாவட்டத்தில் இந்தாண்டு பருவமழை பெய்யாததை தொடர்ந்து மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை தாலுகா, தண்டலை கிராமத்தில் உள்ள விவசாயி திரு.முருகேசன் என்பவரது வயல், இலுப்பூர் தாலுகா, பெருமாநாடு கிராமத்தில் உள்ள விவசாயிகள் திரு.பெரியதம்பி மற்றும் திரு.கருப்பையா ஆகியோரது வயல்கள், திருமயம் தாலுகா பிலாக்குடிப்பட்டி கிராமத்தில் உள்ள விவசாயிகள் திரு.அண்ணாமலை மற்றும் திரு.சின்னய்யாபிள்ளை ஆகியோரது வயல்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் இந்த ஆய்வின் போது வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலங்களில் மொத்தப்பரப்பு, பயிரிடப்பட்ட பயிர்கள், பயிர்க்காப்பீடு செய்யப்பட்ட விபரம் போன்ற பல்வேறு தகவல்கள் கேட்டறியப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதுடன் அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் இழப்பீடு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**